செய்தி வெளியீடு எண்: 661 நாள்:14.09.2020

## செய்தி வெளியீடு

## "உயிரி பன்மம் பாதுகாப்பு மற்றும் சுற்றுச்சூழல் நிலத்தன்மை" குறித்த குழு விவாதம்

"பல்லுயிர் பாதுகாப்பு மற்றும் சுற்றுச்சூழல் நிலைத்தன்மை" தலைப்பில் கருத்தாய்வுக் கூட்டம் காணொளி வாயிலான பங்கேற்பு முறையுடன் மாநில வளர்ச்சிக் கொள்கைக் குழுவின் (முன்னாள் மாநிலத் திட்டக் குழு) மாண்புமிகு துணைத் தலைவர் திரு.சி.பொன்னையன் அவர்களின் தலைமையில் 09.09.2020 அன்று காலை 11.00 மணியளவில் நடைபெற்றது. நம் பூமி தோன்றி 46 லட்சம் ஆண்டுகள் கடந்த நிலையில் மனிதன் தோன்றி தொழில் துறையில் முன்னேறிய நிலையில் இன்று 50% உலகில் உள்ள அனைத்து காடுகளும் அழிக்கப்பட்டுள்ளது. உலகின் 40% பொருளாதாரம், உயிரியல் செயல்முறைகள் மற்றும் தயாரிப்புக்களைச் சார்ந்துள்ளது. பல்லுயிரிலிருந்து பெறப்படும் மருந்துகளின் தோராய மதிப்பு ரூ.4340 கோடியாகும். நம்மைச் சுற்றியுள்ள செடி கொடிகள் மூலம் நமக்கு கிடைக்கும் நன்மைகள் அனைத்திற்கும் நம்மால் விலை நிர்ணயம் செய்ய இயலாது. எனினும் சுற்றுச்சூழல் மூலம் நமக்கு காய், கனி, உடை, நீர், சுவாசிக்க காற்று எரிபொருள், மருத்துவ செடிகள், கால்நடைத் தீவனம், இருப்பிடம் கட்டத் தேவையான மரம், சிறுவனமகசூல் இவை கிடைக்கின்றன. இதில் சராசரியாக ஓர் இந்தியன் 69 ஆண்டுகள் வாழ்வதாகக் கணக்கில் கொண்டால் அவன் சுற்றுச்சூழலிலிருந்து பெறும்

பிராணவாயுவின் மதிப்பு சுமார் ரூ.72.5 கோடியாகும். ஓர் மனிதன் வனத்திற்குள் சென்றால் அவனுக்கு மன அமைதி, உற்சாகம், புதிய சிந்தனை, இயற்கை பற்றிய படிப்பறிவு மற்றும் நம் நாட்டின் ஆன்மீக மற்றும் மதத்தன் மதிப்பையும் உணர்கிறான். வனங்கள் மழை மேகங்கள் உருவாகவும், மண் அரிப்பை தடுக்கவும், கரியமில வாயுவை உள்வாங்கி சுற்றுச்சூழல் நிலையைச் சமமாக வைக்கவும், நோய் எதிர்ப்புச் சக்தியை அதிகரிக்கவும், இயற்கையில் ஊட்டச்சத்து சுழற்சிக்கும், உயிரினங்களுக்கு உறைவிடமாக அமைகின்றது. ஆனால், இவை அனைத்திற்கும் பணத்தால் மதிப்பு கூற முடியாது. இருப்பினும் மத்திய சுற்றுச்சூழல் துறை மூலம் The Economics of Ecosystems and Biodiversity India Initiative, 70 சுற்றுச்சூழல் பொருளாதார நிபுணர்களைக் கொண்டு ஒரு ஹெக்டேர் வனங்கள் மூலம் கிடைக்கும் சேவைகளின் மதிப்பு ரூ.2,52,695 என்று நிர்ணயித்துள்ளது. தமிழ்நாட்டில் வனப் பரப்பளவு 22,87,700 ஹெக்டேர் உள்ள நிலையில் வனங்கள் மூலம் கிடைக்கும் 17 வகையான பயன்களுக்கு மட்டுமே போடப்படும் மதிப்பு ரூ.57,809 கோடிகள். இன்னும் மதிப்பிட முடியாத பயன்கள் இன்னும் பல கோடிகள். உயிரி பன்மம் சட்டம் 2002 (Biological Diversity Act, 2002) இயற்றப்பட்டதின் நோக்கம் மக்கள் மூலம் பல்லுயிர் பாதுகாப்பு, மக்கள் உயிரி பன்ம பதிவேடு தயாரித்தல் மற்றும் இயற்கை வளங்களின் மூலம் கிடைக்கும் நன்மைகளை (பண மதிப்பீடாக) பகிர்ந்துகொள்ளுதல். (Access Benefit Sharing) தமிழ்நாட்டில் மொத்தம் 13,604 உயிர் பன்ம

லோண்மை குழுக்கள் உறுவாக்கப்பட்டுள்ளது. மேலும், ஒவ்வொரு குழுவிற்கும் ஒன்று என்ற கணக்கும் 13,604 மக்கள் உயிரி பன்ம பதிவேடுகள் நவம்பர் 2019 முதல் ஜனவரி 2020க்குள் தமிழ்நாடு மாநில உயிரி பன்ம வாரியம் மூலம் தயாரிக்கப்பட்டுள்ளது. இப்பதிவேட்டில் அந்தந்த குழுக்களின் எல்லைக்குட்பட்ட இடத்தில் அமைந்திருக்கும் பல்லுயிர்கள் குறித்தும் அம்மக்களிடையே பல்லுயிர் குறித்த பாரம்பரிய அறிவு சார் குறிப்புக்களும் இடம்பெற்றுள்ளன. இது குறித்து தேசிய உயிரி பன்ம ஆணையம் பாராட்டி மற்ற மாநிலங்களும் தமிழ்நாட்டின் மக்கள் உயிரி பன்ம பதிவேட்டினை உருவாக்க பயன்படுத்திய உக்தியை மாதிரியாகப் கொண்டு உருவாக்க அறிவுரை வழங்கியுள்ளது.

இவ்வளவு அறிவியல் முன்னேற்றத்தில் இருக்கும் நமக்கு 46 லட்சம் ஆண்டுகளுக்கு முன் தோன்றிய உலகில் உள்ள அனைத்து பல்லுயிர்கள் குறித்து 27% மட்டுமே தெரியும் அவற்றில் வைரஸ் 1%, பாக்டீரியா 0.5%, புரோடிஸ்டா 16%, பூஞ்சான் 5%, பிரையோபைடா 50%, பூச்சிகள் 12%, மொலஸ்க் 35% முதுகெலும்பு வகை பல்லுயிர்கள் 96% தெரிந்தவை. மேற்குத் தொடர்ச்சி மலையில் மட்டுமே காணக்கூடிய இந்தியாவின் 53% தாவர வகைகள் உள்ளது. இதில் 1273 வகை தாவரங்கள் மேற்குத் தொடர்ச்சி மலையில் மட்டுமே காணப்படும். 2019–ல் கடல்சார்ந்த மீன்பிடித்தலில் தமிழ்நாடு, இந்தியாவில் முதலாவதாகப் பட்டியலிடப்பட்டுள்ளது. இந்தியாவின் மீன் ஏற்றுமதியில் 21% தமிழ்நாட்டைச் சார்ந்தது. இதில் 27% ராமநாதபுரத்திலிருந்தும் 18%

சென்னையிலிருந்தும் 12% கன்னியாகுமரியிலிருந்தும் 11% நாகப்பட்டினத்திலிருந்தும் செல்கின்றது. இக்கருத்தரங்கில் மீனவர்கள் எதிர்கொள்ளும் இன்னல்கள் மற்றும் அவைகளைக் களயக் கூடிய வழிகள் குறித்தும் விவாதிக்கப்பட்டது.

இக்கூட்டத்தில் முனைவர். சந்தீப் சக்சேனா, இ.ஆ.ப., அரசு கூடுதல் தலைமை செயலாளர், சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை, முனைவர். பி. துரைராசு, இ.வ.ப., முதன்மை தலைமை வனப் பாதுகாவலர், திரு. அனில் மேஷ்ராம், இ.ஆ.ப., உறுப்பினர் செயலர், மாநில வளர்ச்சிக் கொள்கைக் குழு, முனைவர். பு.செ. அர்ச்சனை கல்யாணி, இ.வ.ப., குழுமத் தலைவர் (நிலப் பயன்பாடு) மாநில வளர்ச்சிக் கொள்கைக் குழு, திருமதி. சரயு, இ.ஆ.ப., திட்ட இயக்குநர், சிறப்புப் பகுதி மேம்பாட்டு திட்டம் பிரிவு–1, உதகமண்டலம், மாவட்ட ஆட்சியர்கள், மாவட்ட வனப் பாதுகாவலர்கள், துறை சார்ந்த உயர் அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**